(அ) கே. ஜி. கண்டிகை கிளை மின் நிலையப் பணிக்கு ஒப்புதல் அளித்தும் இதுவரை ஏன் ஆரம்பிக்கப்படாமல் உள்ளது?

(ஆ) இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கே. ஜி. கண்டிகையில் ஒரு 33/11 கே. வி. துணை மின் நிலையமும், 5 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியும் அமைக்கும் பணி எட்டாவது திட்டக் காலத்தில் அதாவது 1990–91 ஆம் ஆண்டுக்கான திட்டப் பணிகளில் சேர்க்கப் பட்டுள்ளது. மின் நிலையத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட பணிகள் நடந்து வருகின்றன. விரைவில் இம்மின் நிலையம் கட்டி முடிக்கப்பட்டு, 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் இயக்கத்திற்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

(ஆ) மொத்தம் 59 லட்சம் ரூபாய் செலவு ஆகும்.

உடல் ஊனமுற்றவர்கள் அரசு பேருந்துகளில் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ்.

*2644—திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) உடல் ஊனமுற்றவர்கள் அரசு பஸ்களில் பயணம் செய்ய இலவச பஸ் பாஸ் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எந்த அடிப்படையில் வழங்கப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : ஒரு விவர அறிக்கை அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

விவர அறிக்கை.

(1) கண்பார்வையற்றவர்கள், வாதநோய் அல்லது வேறு வகையிலோ கை மற்றும் கால் உறுப்புகளில் ஒன்று அல்லது இரண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ சான்றிதழ்படி அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் காலம் வரை மருத்துவ சான்றிதழ் 3 வருடத்திற்கு மேல் நீட்டித்திருக்கக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, சென்னையிலிருந்து, 15 கி. மீ. தூரம் வரை அவர்கள் பயணம் செய்ய பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இலவச பயண சலுகை வழங்கப்படுகிறது.

(2) தமிழ்நாட்டிலுள்ள கண் பார்வையற்றவர்களுக்கு வயது வரம்பின்றி திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர அனைத்து போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளில் மருத்துவ மனை, பள்ளி மற்றும் பிற பயணங்கள் மேற்கொள்வதற்கு, அவர்களது இல்லத்திலிருந்து சென்று திரும்பிவர இலவச பயணச் சலுகை அளிக்கப்படுகிறது. மேலும் கல்லூரிகள் மற்றும் தொழிற்சாலை போன்ற இடங்களுக்குச் சென்று திரும்பிவர இச் சலுகை பார்வையற்றவர்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

(3) உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு அவர்களது ஊனம் 50 விழுக்காடுக்கு கூடுதலாயிருந்தால், அவர்களது இருப்பிடத்தி லிருந்து பள்ளி மற்றும் மருத்துவமனைகளுக்குச் சென்று திரும்பி வர இலவச பயண சலுகை அனைத்து பேருந்துகளிலும் திரு வள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர வழங்கப்படுகிறது.

(4) அரசால் ஒப்பளிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களில் மனவளர்ச்சியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு அவ்வில்லத்தி லிருந்து மருத்துவமனை மற்றும் பள்ளிக்குச் சென்று வரவும் அவர்களுக்கு துணை செல்லும் நபருக்கும், திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகம் தவிர இலவச பயண சலுகை வழங்கப்படு கிறது.

(5) ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையின்படி, அரசு அலுவலகங்களில் பணிபுரியும் உடல் ஊனமுற்ற அரசு ஊழியர் களுக்கு அவர்களது மாத ஊதியத்தில் 5% அல்லது ரூ. 50-க்கு மிகையாகாமல் அவர்களுக்குப் பயணப்படியாக வழங்க அரசு ஆணை எண் 667 நிதி (ஊதியக்குழு), நாள் 28—6—89-ல் ஆணை வெளியிடப்பட்டது.

(6) 4—12—85 அன்று நடைபெற்ற மாநில உடல் ஊன முற்றோர் நல வாரியத்தின் இரண்டாவது குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமான காது கேளாதோர்/உடல் ஊன முற்றவர்/தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள்/மூளை வளர்ச்சி மனநிலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச பேருந்து பயண சலுகை வழங்க வேண்டும் என்பது குறித்து அரசு பரிசிலித்தபோது தற்போதுள்ள அரசின் நிதி நிலைக் காரணமாக அனைத்து உடல் ஊனமுற்றவர்களுக்கும் இலவச பயண சலுகை வழங்கினால் நிதி நெருக்கடி ஏற்படும் எனக் கருதி இச்செயற்குறிப்பினை நிரா கரித்துள்ளது.

காசநோய் மருத்துவமனை.

*3803—திரு. அ. இரகுமான்கான்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா: